மாகாணக் கல்வித் திணைக்களம்
வடமாகாணம்

தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2025
மாதிரிப் பரீட்சை - 02

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை.

பத்திரம் - I

1 மணித்தியாலம்

5

சுட்டெண் .....

பாடசாலை .....

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான வினாக்களின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	-
08	-
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
☐ × $2\frac{1}{2}$ = ☐ புள்ளிகள்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்து கின்றேன்.	..... பெயர்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்.	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

www.lkedu.lk

நாட்டின் எப்பாகத்திலிருந்தும்
கற்பித்தல் அனுபவம் உள்ள திறமையான ஆசிரியர்களிடம்
கல்வி கற்க விரும்புகிறீர்களா

இதோ உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

Learn Easy கல்வி நிலையத்தில் நிகழ்நிலையாக

zoom Online class

76667-4945

அனைத்து வகுப்புகளுக்குமான அனுமதிக்கட்டணம் இலவசம்


Mobile	076667-4945
WhatsApp	+94 76667-4945
Viber	+94 76667-4945
Email	learneasy.lk@gmail.com
Web	www.learneasy.lk

FB Page - https://www.facebook.com/learneasylk

வகுப்புக்கள் தொடர்பான மேலதிக தகவல்களை
மேலுள்ள இலக்கத்திற்கு
WhatsApp செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்


01. பின்வரும் இரண்டு உருக்களையும் பற்றி குறிப்பிட்டுள்ள சரியான கூற்று யாது?

(A) (B)




1. உரு A யில் வரையப்பட்டுள்ளது போன்று உரு B யிலும் வரையப்பட்டுள்ளது.
2. உரு A யில் வரையப்பட்டுள்ள உருவங்களின் எண்ணிக்கையை விட உரு B யில் வரையப் பட்டுள்ள உருவங்கள் அதிகம்.
3. உரு A யில் வரையப்பட்டுள்ள உருவங்களின் எண்ணிக்கையை விட உரு B யில் வரையப் பட்டுள்ள உருவங்கள் குறைவாகும்.

02. கீழே உள்ள தாவர இலைகளின் உருவங்களை அவற்றின் வடிவத்திற்கு ஏற்ப குவியல்களாக வேறுபடுத்தினால் கிடைக்கும் குவியல்களின் எண்ணிக்கை யாது?





1. 4
2. 5
3. 3


❖ **3ஆம், 4ஆம் வினாக்களில் கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**


03. 

1) 

2) 

3) 

04. 

1) 

2) 

3) 

05. **AOT** **XOB** **XYS** மூன்று கட்டங்களில் ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு கட்டங்களை ஒரு தொகுதியாகவும் ஒன்றை வேறு ஒரு தொகுதியாகவும் வகைப்படுத்த முடியும் எனின், ஒரு தொகுதியாக்கக்கூடிய இரண்டு கட்டங்களும் எவை?

1) **AOT** **XOB** 2) **AOT** **XYS** 3) **XOB** **XYS**

www.lkedu.lk

06. பின்வரும் கவிதையிலுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொற்கள் முறையே இடம் பெறும் விடையைத் தெரிவு செய்க.


சின்னப் பாப்பா .....
சின்ன முத்து உதிருது
அழகுப் பாப்பா .....
அன்னை முகம் மலருது

1) நடிப்பிலே, அழுகையிலே 2) நடக்கையில், படிக்கையிலே 3) சிரிப்பாலே, அன்பிலே


07. பயிற்சிப் புத்தகம் ஒன்றின் விலை ரூபாய் xyx ஆகும். புத்தகப்பை ஒன்றின் விலை ரூபாய் xyy ஆகும். x= 5, y=3 ஆயின் இரண்டு பொருள்களையும் வாங்குவதற்கு தேவையான பணம் எவ்வளவு?

1) ரூபாய் 1086.00 2) ரூபாய் 1068.00 3) ரூபாய் 1060.00

❖ **பின்வரும் உருக்களைப் பயன்படுத்தி 8ஆம், 9ஆம் வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிவு செய்க.**



ரூபாய் 120.00



ரூபாய் 195.00

08. மூன்று புத்தகங்களினதும் ஐந்து புத்தகப் பைகளினதும் விலை யாது?

1) ரூபாய் 390.00 2) ரூபாய் 315.00 3) ரூபாய் 240.00

09. இரண்டு புத்தகங்களையும் நான்கு புத்தகப்பைகளையும் வாங்கும் ஒருவர் ரூபாய் 500.00 ஐ கடைக்காரனிடம் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

1) ரூபாய் 240.00 2) ரூபாய் 110.00 3) ரூபாய் 260.00

10. பெட்டி ஒன்றிலிருந்த பந்துகளை குவியலொன்றில் 4 வீதம் இருக்குமாறு பிரிக்கப்பட்டன எனினும், இறுதிக் குவியலை அமைக்கும்போது 3 பந்துகள் குறைவாக இருந்தது எனின், பெட்டியிலிருந்த பந்துகளின் எண்ணிக்கை யாது?

1) 24 பந்துகள் 2) 33 பந்துகள் 3) 26 பந்துகள்

11. மூன்று நண்பர்களின் வயதுகளின் கூட்டுத் தொகை 29 வருடங்கள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களின் பின்னர் இவர்களின் வயதுகளின் கூட்டுத் தொகை 38 வருடங்கள் ஆகும்.

1) 3 வருடங்கள் 2) 9 வருடங்கள் 3) 4 வருடங்கள்

12. கண்ணனிற்கு இரண்டு நீர்க்குழாய்களைப் பொருத்துவதற்கு 4 நிமிடங்கள் தேவைப்பட்டன எனின் அவ்வாறான 6 நீர்க்குழாய்களைப் பொருத்துவதற்கு எத்தனை நிமிடங்கள் தேவைப்படும்?

1. 24 நிமிடங்கள் 2. 12 நிமிடங்கள் 3. 20 நிமிடங்கள்

13. 31 நாட்கள் கொண்ட மாதம் ஒன்றில் 4ஆம் நாள் புதன் கிழமை எனின் அம் மாதத்தின் நடுநாள் என்ன கிழமையாகும்

1) புதன்கிழமை 2) திங்கட்கிழமை 3) வியாழக்கிழமை

14. 13 → 20 → 80
12 → 40 → 120
11 → 30 → ---

வெற்றிடத்தில் வரவேண்டிய எண் யாது?


1) 150
2) 60
3) 90

15. சரியான கோவையைத் தெரிவு செய்க.

1) 555 + 55 + 5 + 5 + 5 = 680
2) 555 + 55 + 55 + 5 + 5 + 5 = 680
3) 555 + 55 + 55 + 5 + 5 = 680

www.ikedu.lk

16. மூன்று மணித்தியாலத்திற்கு ஒரு தடவை ஒலிக்கும் கடிகாரம் ஒன்று முதலாவதாக காலை 10.00 மணிக்கு ஒலித்தது. எனின், அது இரவு 10.00 மணியாகும்போது எத்தனையாவது தடவை ஒலிக்கும்?
1) 4 வது தடவை 2) 6 வது தடவை 3) 5 வது தடவை

17. 
இத்திண்மத்தில் காணப்படும் மேற்பரப்புக்கள் எத்தனை.
1) 8
2) 6
3) 4

18. கீழுள்ள உரு B நிறுத்தாடுவளையை சமப்படுத்த வைக்க வேண்டிய உருத்தொகுதி.



(A)


(B)

1)  2)  3) 

19. தனிப்பட்ட கூற்றாக அமையும் விடையைத் தெரிவு செய்க.
1) இப் பூ அழகானது.
2) வெள்ளைக் கோட்டுக் கடவையால் பாதையைக் கடக்க வேண்டும்.
3) இடி மின்னல் வேளையில் வெளியில் செல்ல வேண்டாம்.

20. சதுரமுகி ஒன்றை உருவாக்குவதற்கு 12 தீக்குச்சிகள் தேவை, உருவில் காட்டப்பட்டவாறு ஒன்றோடு ஒன்று இணைந்தது போன்ற 6 சதுரமுகி வடிவங்கள் உள்ள உருவை ஆக்குவதற்கு இன்னும் எத்தனை தீக்குச்சிகள் தேவை.



1) 36 2) 24 3) 48

21. தருண் ஒரு புகைப்படத்தைக்காட்டி இப்புகைப்படத்தில் இருப்பவர் என் தாயாரின் ஒரே ஒரு மகள் என்றான் எனின் புகைப்படத்தில் இருப்பவர் தருணிற்கு என்ன உறவு முறை?
1) சித்தி 2) சகோதரி 3) பெரியம்மா

❖ **கீழே தரப்பட்டுள்ள சதுரமுகிக் கட்டையை அடிப்படையாகக் கொண்டு 22ஆம், 23 ஆம் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.**



இச் சதுரமுகிக் குற்றியின் மேற்பரப்பில் மை பூசப்பட்டு கோடுகள் வழியே வெட்டி வேறாக்கப்படுகின்றது.

22. மூன்று பக்கங்கள் மட்டும் வர்ணம் பூசப்பட்ட சிறிய குற்றிகள் எத்தனை உள்ளன?
1) 6 2) 8 3) 12

23. ஒரு பக்கம் மட்டும் வர்ணம் பூசப்பட்ட சிறிய குற்றிகள் எத்தனை உள்ளன?
1) 27 2) 12 3) 6

24. சிறப்பு அங்காடி ஒன்றின் விற்பனைக் கண்காட்சி ஒரு வெள்ளிக்கிழமை ஆரம்பித்தது. அது எட்டு நாட்களாக நடைபெற்றது எனின் கண்காட்சி முடிவடைந்த நாள் எது?
1) வியாழக்கிழமை 2) வெள்ளிக்கிழமை 3) சனிக்கிழமை

25. 5, 3, 2 இவ் இலக்கங்களைப் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய ஈரிலக்க இரட்டை எண்கள் எத்தனை?
1) 2 2) 6 3) 4

www.lkedu.lk

26. பின்வரும் வாக்கியங்களை சரியான ஒழுங்கில் எழுதினால் வரும் விடை யாது?

A. பாட மணி ஒலித்தது.

B. வகுப்பறையை விட்டு வெளியேறினார்.

C. பாடங்களைக் கற்பித்தார்.

D. ஆசிரியர் வகுப்பிற்கு வந்தார்.


E. பயிற்சிக் கொப்பிகளைத் திருத்தினார்.

1) ADEBC 2) ADCEB 3) ADCBE

27. பெரும்பாலான மாதங்கள் முதலாந் திகதி தொடங்கும் நாளிலேயே முடிவடைவதில்லை. குறித்த சில வருடங்களில் ஒரு மாதம் மட்டும் முதலாந் திகதி தொடங்கும் நாளிலேயே முடிவடையும், எனின், வருடமொன்றின் ஒரு மாதத்தின் முதலாந் திகதி நாளும், அம்மாதத்தின் இறுதி நாளும் ஒரே நாளாக அமையக் கூடிய வருடம் எது?

1) 2018 2) 2025 3) 2028

❖ **ஒரு வாகன விற்பனை நிலையத்தில் உள்ள வாகனங்கள் தொடர்பான விபரங்கள் கீழே குறியீட்டில் காட்டப்பட்டுள்ளன. அதன் படி, 28ஆம், 29ஆம் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**




28. மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள வாகன வகை எது?

1)  2)  3) 

29. மேலே காட்டப்பட்ட வாகன விற்பனை நிலையத்தில் உள்ள வாகன எண்ணிக்கை படிப்படியாகக் கூடிச் செல்லும் ஒழுங்கு முறையில் எழுதினால் கிடைக்கப் பெறுவது.

1) மோட்டார்சைக்கிள் - கார் - முச்சக்கர வண்டி
2) முச்சக்கர வண்டி - கார் - மோட்டார்சைக்கிள்
3) மோட்டார்சைக்கிள் - முச்சக்கர வண்டி - கார்


30. 

இவ் உருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

1) 10
2) 11
3) 13

31. தாயக்கட்டை ஒன்றின் பல்வேறு அமைவுகள் தரப்பட்டுள்ளன. அதனை அவதானித்து எழுத்து F க்கு எதிரே உள்ள எழுத்து எது எனக் காண்க?

1) C
2) B
3) E



32. 50 வினாக்களைக் கொண்டமைந்த நுண்ணறிவு வினாத்தாள் ஒன்றில் சரியாக விடையளிக்கும் ஒவ்வொரு வினாவிற்கும் 2 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். பிழையாக விடையளிக்கும் ஒவ்வொரு வினாவிற்கும் மேலதிகமாக 1 புள்ளி கழிக்கப்படும். இதனடிப்படையில் 64 புள்ளிகளைப் பெற்ற ஒருவர் எத்தனை வினாக்களுக்கு சரியாக விடையளித்திருப்பார்?

1) 32 2) 36 3) 38

www.ikeu.lk

33. தட்டொன்றில் ஒரே நேரத்தில் இரண்டு தோசைகளைச் சுடலாம். ஒரு தோசையை ஒரு பக்கம் சுடுவதற்கு 6 நிமிடங்கள் செலவாகின்றன. இந்தத் தட்டில் 5 தோசைகளைச் சுடுவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு?
1) 30 நிமிடம் 2) 36 நிமிடம் 3) 60 நிமிடம்

34. 2025 ம் ஆண்டு 21 ம் நூற்றாண்டின் எத்தனையாவது தசாப்தத்திற்கு உரியது?
1) மூன்றாம் தசாப்தம் 2) இரண்டாம் தசாப்தம் 3) நான்காம் தசாப்தம்


35. கமலன் காலைவேளை பாடசாலை செல்லும் போது அவனது நிழல் அவனுக்குப் பின்புறமாக விழுந்தது. எனின் அவன் செல்லும் திசை யாது?
1) கிழக்கு 2) மேற்கு 3) தெற்கு

36. தெருவோரத்தில் ஒரு பக்கமாக நீலம், மஞ்சள், பச்சை, சிவப்பு, மஞ்சள் என்ற ஒழுங்கில் மாறி மாறி கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. 74 ஆவது கொடியின் நிறம் யாதாக இருக்கும்?
1) மஞ்சள் 2) சிவப்பு 3) நீலம்

37. வரிசையொன்றில் 41 பேர் நிற்கின்றார்கள். கேதீஸ் சரி நடுவில் நிற்கின்றான். அவன் முன்னாலிருந்து எத்தனையாவதாக நிற்கின்றான்?
1) 20 2) 21 3) 24

38. சரியான விடையைத் தெரிவு செய்க.
1) எழுத்து → சொல் → பந்தி → வாக்கியம் → கதை
2) எழுத்து → சொல் → அகராதி → வாக்கியம் → கதை
3) எழுத்து → சொல் → வாக்கியம் → பந்தி → கதை

❖ **சிறுவன் வீட்டிலிருந்து பாடசாலை சென்ற பாதையைப் படம் காட்டுகின்றது.**



39. வலது பக்கம் திரும்பிய தடவைகளின் எண்ணிக்கை யாது?
1) 5 தடவைகள் 2) 4 தடவைகள் 3) 3 தடவைகள்

40. 4 பந்துகளை ரூபாய் 50.00 இற்கு வாங்கி 3 பந்துகளை ரூபாய் 60.00 இற்கு விற்பதன் மூலம் ரூபாய் 180.00 இலாபமாக கிடைத்தது எனில், அவர் எத்தனை பந்துகளை வாங்கி விற்பனை செய்திருப்பார்?
1) 12 பந்துகள் 2) 24 பந்துகள் 3) 40 பந்துகள்

www.ikedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடமாகாணம்

தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2025
மாதிரிப் பரீட்சை - 02

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை.

பத்திரம் - II

1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

5

சுட்டெண் .....

பாடசாலை .....

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்து கின்றேன்.	..... பெயர்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்.	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

அழையுங்கள் :
76667-4945

zoom

எப்பாத்திலிருந்தும்
இணையலாம்





தரம் 1
தொடக்கம்

தரம் 5
வரை

- பாடத் தெரிவுகள் செய்ய முடியாது.
- சகல பாடங்களுக்குமான மாதக்கட்டணம்
- அனைத்து பாடங்களுக்குமான recording வழங்கப்படும்.

நுண்ணறிவு
வினாத்தாள்
(பகுதி 1, பகுதி 2)

Spoken English

தமிழ்
கணிதம்
சுற்றாடல்
ஆங்கிலம்
சிங்களம்

1. **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

நீல வானைச் செந்நிறமாக்கிய கதிரவன் தன் பொற்கரங்களை நீட்டிப் பனித்துளிகளைத் தொட்டுச் செல்கின்றான். கதிரவனின் பொற்கரம் பட்டதும் இலைகளின் நடுவே இரத்தினக் கற்களாக மின்னிய பனித்துளிகள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின.

(i) நீல வானைச் செந்நிறமாக்கியது எது?

.....

(ii) இரத்தினக் கற்கள் போல மின்னியவை எவை?

.....

(iii) அடுக்கு மொழிச் சொல்லைத் தருக.

.....

(iv) சினைப்பெயர் ஒன்று எழுதுக?

.....

(v) பனித்துளிகள் மறையத் தொடங்கியமைக்கான காரணம் யாது?

.....

(vi) பனி + துளி என்பதைச் சேர்த்து எழுதினால் வரும் விடை யாது?

.....

(06 புள்ளிகள்)

2. **அஃறிணைப் பன்மைப் பெயர்ச் சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1) மாணவர்கள் 2) பசுக்கள் 3) ஆசிரியர்கள்

(02 புள்ளிகள்)

3. **சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.**

i) 1) முயர்ச்சி 2) முயச்சி 3) முயற்சி 4) முயற்ச்சி

(ii) 1) வேர்வை 2) வியர்வை 3) வியவை 4) வேர்வ **(02 புள்ளிகள்)**

4. **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.**

(i) உங்களால் எழுதவும் வாசிக்கவும் முடியுமா

(ii) மரம் செடி கொடிகள் எவற்றைத் தருகின்றன **(02 புள்ளிகள்)**

5. **பின்வரும் தொடர் மொழிகளுக்குப் பொருத்தமான தனிச் சொல்லை எழுதுக.**

(i) முனிவர்கள் வசிக்கும் இடம் .....

(ii) ஐம்பதாவது ஆண்டின் நிறைவில் கொண்டாடப்படும் விழா .....

(02 புள்ளிகள்)

6. **தரப்பட்டுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து கோடிடுக.**

(i) நீடூழி காலம் ..... (வாழ்க , வாள்க)

(ii) மக்களுக்குச் சேவை செய்வது மிகச் சிறந்த ..... (பணி , பனி) ஆகும்.

(02 புள்ளிகள்)

www.lkedu.lk

7. **பின்வரும் வாக்கியங்களிலுள்ள இணை மொழிகளை எழுதுக.**

(i) சந்தையில் காய்கறிகள் வாடி வதங்கிக் காணப்பட்டன. .....

(ii) பெண்கள் வயலில் ஓடி ஆடி வேலை செய்தனர். .....

(02 புள்ளிகள்)

8. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் (சரி) எனவும் , பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.**

(i) தாலாட்டுப் பாடல்கள் இனிமையானவை. (.....)

(ii) ஒவ்வொரு பழமும் நல்லவை. (.....) **(02 புள்ளிகள்)**

9. **பின்வரும் பிராணிகளின் இளமைப் பெயர்களை எழுதுக.**

(i) கீரி .....

(ii) மான் ..... **(02 புள்ளிகள்)**

10. **வாக்கியத்தில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி மீண்டும் எழுதுக.**

(i) நாம் ஓய்வு நேரங்களில் நூளகம் சென்று படிப்பது நல்லது.


.....


(ii) எப்போதும் சுற்றுப் புரத்தைத் தூய்மையாக வைத்திருப்போம்.

.....

(02 புள்ளிகள்)

11. **தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

(i) 

(ii) 

....

(02 புள்ளிகள்)

12. **பின்வரும் ஆங்கில சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

(i) Meat .....

(ii) Hospital ..... **(02 புள்ளிகள்)**

13. **கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் எழுதுக.**

(i) my / This / sister / is .....

(ii) book / I / reading / a / am .....

(02 புள்ளிகள்)

www.lkedu.lk

14. “பந்தி காமரய” என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

..... **(01புள்ளிகள்)**

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

“உங்களுக்கு தண்ணீர் வேணுமா?” .....

(1 புள்ளிகள்)

16. “இருபத்தொன்பதாயிரத்து எண்பத்தேழு” என்ற எண்ணை இலக்கத்தில் எழுதுக.

.....


17. பின்வரும் எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

8210 , 8038 , 8407 .....

18. எண்கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இடம்பெற வேண்டிய எண்களை எழுதுக.

..... , ... , 47 , 55 , 63 , 71

19. எண்சட்டத்தில் வகை குறிக்கப்படும் எண்ணின் எண் பெயரை எழுதுக.



.....

20. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு விடையளிக்குக.

பாடசாலை	**A**	**B**	**C**	**D**
மாணவர் எண்ணிக்கை	2365	690	1812	2015

(i) பாடசாலை A, C இரண்டிலும் உள்ள மொத்த மாணவர்களின் கூட்டுத்தொகை யாது?

.....

(ii) பாடசாலை D யை விட பாடசாலை B இல் எத்தனை மாணவர்கள் குறைவாக உள்ளனர்?

.....

21. 432 இனை 4 இனால் வகுக்கும் போது கிடைக்கும் விடை யாது? .....


22. விலைப் பட்டியலைப் பார்த்து சிட்டையைப் பூர்த்தி செய்க.

காய்கறி வகை	**அளவு**	**விலை**	
		ரூபாய்	**சதம்**
கரட்	1kg	90	00
பீற்றூட்	1kg	70	00
கோவா	1kg	100	00
முள்ளங்கி	1kg	110	00

காய்கறி வகை	**அளவு**	**விலை**	
		ரூபாய்	**சதம்**
கரட்	500g	45	00
பீற்றூட்	250g	.....	.....
கோவா	500g	.....	.....
முள்ளங்கி	2kg	.....	.....
மொத்தப் பணம்		.....	.....

www.lkedu.lk

23. வட்டத்தில் உள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கையை உரோம எண்ணில் எழுதுக.



.....


24. ஒரு மாணவனுக்கு நான்கு விசுக்கோத்துக்கள் வீதம் ஒரு சுற்றுலாவில் பங்குபற்றும் 94 மாணவர் களுக்கு விநியோகிப்பதற்கு எத்தனை விசுக்கோத்துக்கள் தேவை?

.....

25. இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதியைப் பின்னத்தில் எழுதுக.



.....

26. 

தரப்பட்டுள்ள திண்ம உருவில் உள்ள முகங்களின் எண்ணிக்கை யாது?


.....

27. முரளி 2ℓ 800mℓ பாலிலிருந்து அரைவாசியை வீட்டுத் தேவைக்குப் பயன்படுத்திய பின் எஞ்சியுள்ள பாலை 4 போத்தல்களில் சம அளவுகளில் ஊற்றினான் எனின், அவன் ஒரு போத்தலில் ஊற்றிய பாலின் அளவு யாது?

..... mℓ

28. குமுதா குறித்தவொரு இடத்திலிருந்து 100 m வடக்கு நோக்கிச் சென்று பின் அவ்விடத்திலிருந்து இடது கைப்பக்கமாகத் திரும்பி 100 m சென்றாள் எனின், அவள் பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து தற்போது எத்திசையில் இருக்கின்றாள்?

.....

29. 

i) அதிகமான மாணவர்கள் விரும்பும் பூ எது? .....

ii) குழுவில் மொத்தமாக எத்தனை மாணவர்கள் உள்ளனர்? .....

(32 புள்ளிகள்)

www.lkedu.lk

❖ **30 – 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. "இலவசக் கல்வியின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?
1) கலாநிதி ரீ . பீ ஜாயா 2) கலாநிதி ஆனந்த குமாரசாமி
3) கலாநிதி சி டபிள்யு டபிள்யு கன்னங்கரா

31. உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாடுகளில் மூன்றாவது படிமுறை யாது?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) பிரார்த்தனை

32. கால்கள் அற்ற பிராணிகள் மாத்திரம் இடம்பெறும் விடை யாது?
1) மண்புழு , ஆமை , கபரக்கொய்யா 2) பல்லி , மண்புழு , கறையான்
3) நத்தை , மண்புழு , பாம்பு

33. செண்பகத்தினால் விவசாயிகளுக்குக் கிடைக்கும் நன்மையாக அமைவது
1) ஒலி எழுப்பாது 2) பகலில் நடமாடுதல் 3) நத்தைகளை உண்ணல்

34. பயிர்ச்செய்கைக்குச் சாதகமான பிராணி
1) மயிர்க்கொட்டி 2) மண்புழு 3) தண்டுகோதி

35. எமது சூழலில் உள்ள பொது இடம் அல்லாதது
1) வங்கி 2) நூலகம் 3) வீடு

36. "தன்னிறைவான ஒரு நாட்டில் சூரியனும் சந்திரனும் இருக்கும் காலமெல்லாம் அறத்தைப் பாதுகாத்தவாறு மக்கள் யாவரும் ஓங்கட்டும்." இக்கருத்தை வெளிப்படுத்துவது,
1) தேசியக் கொடி 2) தேசிய இலட்சினை 3) தேசிய கீதம்

37. தேசியக் கொடியிலுள்ள சிவப்பு நிறப்பின்னணி குறிப்பது
1) தேசத்தின் மகத்துவம் 2) சிங்கள மக்களை 3) ஒற்றுமை

38. பனிக்கட்டியை நீண்ட நேரம் கரையாமல் பாதுகாக்க இடப்பட வேண்டியது
1) சாம்பல் 2) மரத்தூள் 3) மண்

39. எண்ணெய் மற்றும் மிளகாய் அதிகம் அடங்கிய உணவுகளை உட்கொள்வதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) இரப்பை அழற்சி 3) உயர்குருதி அமுக்கம்

40. வீட்டுத்தோட்டப் பயிர்களில் கிருமிகளைக் கட்டுப்படுத்த பயன்படுத்தக்கூடிய சுழல்நேய திரவம்
1) மண்ணெண்ணெய் 2) வேப்பெண்ணெய் 3) கொதிநீர்

41. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம்
1) யாழ்ப்பாணம் 2) காலிக்கோட்டை 3) பொலநறுவை

42. காந்தத்தால் கவரப்படும் பொருட்கள் மாத்திரம் அடங்கிய விடையாக அமைவது
1) சவர அலகு, பித்தளை, ஆணி, குண்டூசி
2) இரும்பாணி, குண்டூசி, செப்பு நாணயம்
3) குண்டூசி, சவர அலகு, இரும்பாணி, நாணயம்

43. யாதேனுமொன்றை இறுக்கிப் பிடிப்பதற்கும் கம்பியை வெட்டுவதற்கும் பயன்படும் உபகரணம்
1) கவர்ச் சுத்தியல் 2) இடுக்கி 3) குறடு

44. பற் சில்லுகளைக் கொண்ட ஓர் உபகரணம்
1) மின் அழுத்தி 2) துவிச்சக்கரவண்டி 3) ஒற்றைச்சில்லுவண்டி


www.ikedu.lk

45. கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள மாவட்டங்கள்
1) திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு
2) அம்பாறை, மாத்தளை, திருகோணமலை
3) திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு

46. "ஏலேலோ ஐலசா ....." என்று தொடங்கும் பாடல்
1) உழவர் பாடல் 2) மீனவர் பாடல் 3) அரிவுவெட்டுப் பாடல்

47. "வானத்தில் இருந்து விழும் ஒருதுளி நீரையும் விவசாயத்திற்குப் பயன்படுத்தாது வீணே கடலைச் சென்றடைய விடமாட்டேன்" எனும் புகழ்மிக்க கூற்றைக் கூறிய மன்னன்
1) பராக்கிரமபாகு 2) தாதுசேனன் 3) பண்டுகாபயன்

48. நன்கு சூடாக்கப்பட்ட உலோகக் கரண்டி மீது நீர்த்துளியொன்றை இடும்போது யாது நிகழும்?
1) நீர் குளிர்ச்சியடையும்
2) ஒலி எழும்
3) நீர்த்துளி அப்படியே இருக்கும்

49. 

இவ் உபகரணத்தில் பொருளின் மீது விசை பிரயோகிக்கப்படும் இடத்தைக் குறிக்கும் ஆங்கில எழுத்து.
1) A
2) B
3) C

50. பாம்பு தீண்டிய ஒருவருக்கு செய்யக்கூடிய முதலுதவி
1) காயத்தைச் சவர்க்காரமிட்டுத் தூய நீரினால் கழுவுதல்.
2) காயமுள்ள இடத்தை நூலால் இறுக்கிக் கட்டுதல்.
3) காயமுள்ள இடத்துக்கு எண்ணெய் பூசுதல்.

51. ஆனி, பங்குனி மாதங்களில் பூக்கும் தாவரங்கள் முறையே,
1) இலுப்பை , பாலை 2) வாகை , வீரை 3) நாவல் , விளா

52. கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று
1) பல்லாங்குழி 2) கரப்பந்தாட்டம் 3) துடுப்பாட்டம்

53. நுளம்பினால் பெருகும் நோய்களை மாத்திரம் கொண்ட விடை யாது?
1) டெங்கு , கொரோணா , யானைக்கால்
2) மலேரியா , டெங்கு , சிக்குன்குன்யா
3) மலேரியா , டெங்கு , நீர்வெறுப்பு

54. வித்து முளைத்தலுக்கு அவசியமான காரணிகள்
1) நீர், மண்
2) நீர், சூரிய ஒளி
3) நீர், தகுந்த வெப்பம்

55. உடலுக்கு சக்தி தரும், உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவாக அமைவவை முறையே,
1) மரவள்ளி , பயறு
2) கடலை , இறைச்சி
3) பலாக்காய் , உருளைக்கிழங்கு

56. மின்னஞ்சல் மூலம் பரிமாறக்கூடியது.
1) பொதிகள் 2) பணம் 3) படங்கள்

57. கப்டன்டோசன் கோபுரம் அமைந்துள்ள இடம்.
1) கம்பளை 2) கடுகண்ணாவை 3) மாத்தளை

www.lkedu.lk

58. பூவில் விரைவில் வாடக்கூடிய பகுதி

1) அல்லி 2) புல்லி 3) கேசரம்

59. "வயர்லெஸ் வெர்ல்ட்" எனும் சஞ்சிகையில் வெளியிட்ட கட்டுரை காரணமாக பிரபல்யம் அடைந்தவர்.

1) 

2) 

3) 

(30 புள்ளிகள்)

60. கண்ணனின் வீட்டுத்தோட்டத்தில் தென்னைமரம் ஒன்று இருந்தது. அம்மரத்தில் உள்ள பொந்தில் தாய்க்கிளியும் குஞ்சுகளும் வாழ்ந்து வந்தன. ஒருநாள் தாய்க்கிளி உணவு தேடச்சென்றபோது அம்மரம் முறிந்து விழுந்தது. தாய்க்கிளி திரும்பி வந்து பார்த்தபோது கிளிக்குஞ்சுகள் இருந்த பொந்து சிதறிப் போயிருந்தது. அதனைக் கண்ட தாய்க்கிளி பொருங்கவலையுடன் கீச்சிட்டவாறு தனது குஞ்சுகளைத் தேடியது. இச்சம்வத்தை கண்ணன் காண்கின்றான். இவ்விடத்தில் கண்ணனாக நீர் இருந்தால் உமது உள்ளத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய உணர்வுகளை மூன்று வாக்கியங்களில் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியங்களும் ஐந்து சொற்களுக்கு குறையாமலும் எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக அமைதல் வேண்டும்)

(1) .....

.....

(2) .....

.....

(3) .....

.....

(06 புள்ளிகள்)

www.lkedu.lk